[12th February 1958

THE HON. SRI R. VENKATARAMAN: 1956-ம் வருஷத்தில் "காண்ட்டினெண்ட்டல் ஆயில் கம்பெனி" அதற்கு லைசென்ஸ் வேண்டுமென்று சென்னை அரசாங்கத்தைக் கேட்டார்கள். இது பொதுவாக, மத்திய சர்க்காரின் ஒரு கொள்கையில் வைக்கப்பட்டிருக்கிறது. க்ரூட் ஆயில் அஸ்ஸாமில் கிடைக்கிறது என்று பரிசீலனை செய்து அந்த இடத்தில் வைப்பது என்பதைப்பற்றி நிர்ணயம் செய்ய அவர்கள் உத்தேசித்தார்கள். அதன்படி அஸ்ஸாமிலும், பீஹாரிலும் "ரிபைனரீஸ்" வைப்பதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER: ரஷீத் அவர்களும் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களும் சப்ளிமெண்ட்டரிஸ் கேட்கலாம்.

SRI A. A. RASHEED: When Bombay, Andhra and Assam States have got oil refineries, why should not the Madras Government press upon the Central Government the starting of an oil refinery in Madras also?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, there is absolutely no reason why there should not be an oil refinery in Madras. The dispersal is going on on a set pattern. They have fixed Assam and Bihar for the next stage of development of refinery.

SRI K. ANBAZHAGAN: எண்ணெ சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு எண்ணெ மூலப் பொருள்கள் சென்னை மாநிலத்தில் எங்காவது கிடைக்கிறதா என்று ஆராய ஏதாவது திட்டம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: இது விஷயமாகவுள்ள பூர்வாங்கப் பரிசீலனையில் இதற்கு ஆதாரம் இல்லை என்று தெரிகிறது. ஆனால் மேற்கொண்டும் பரிசீலனை நடக்கும்.

SRI A. GOVINDASAMY: அரசாங்கம் இத்தொழிலை எடுத்து நடத்தாவிட்டால் தனியார் இதை நடத்த முன் வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இது சாதாரண தொழில் அல்ல. இதற்கு க்ரூட் ஆயில் வேண்டும். இப்பொழுது க்ரூட் ஆயில் அஸ்ஸாமில் கிடைக்கிறது. இப்பொழுது இரண்டு ரிபைனரீஸ் போதும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

Devadasis.

* 74 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to revive the system of Devadasis?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No Sir.

Rearing of cocoons in Talavadi firka.

* 75 *Q.*—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the amount allotted for rearing cocoons for the production of raw silk in the Talavadi firka, Coimbatore district, out of the grant from the Central Silk Board in 1957?

THE HON. SRI R. VENKATARAMAN: No grant was received from the Central Silk Board for production of raw silk in Talavadi firka in 1957.